தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு
(2012 – 2013)

(பதினான்காவது பேரவை)

இருபத்தாறாவது அறிக்கை

19.02.2013–ஆம் நாளன்று விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் 08.MAY 2013)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2012 – 2013)

(பதினான்காவது பேரவை)

இருபத்தாறாவது அறிக்கை

19.02.2013–ஆம் நாளன்று விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

பக்கங்கள்

1. 2012–2013ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் அமைப்பு – iii

2. அறிக்கை – v

இணைப்பு – I – 1–12

இணைப்பு – II – 15–43

இணைப்பு – III – 47–50

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு (2012 – 2013)

(பதினான்காவது பேரவை)

(2012–ஆம் ஆண்டு மே திங்கள் 19–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது)

தலைவர்

*1. திரு. ஆர். மனோகரன்,
அரசு தலைமைக் கொறடா

உறுப்பினர்கள்

**2. திரு. ஆர். அருள்செல்வன்

3. திரு. கே. உலகநாதன்

4. திரு. பா. கணேசன்

5. திரு. ஆர்.என். கிட்டுசாமி

6. திரு. டி. சுரேஷ்குமார்

7. திரு. கே. பொன்னுசாமி

8. திரு. ஆ. ராமசாமி

9. திரு. டி.ஆர்.பி. ராஜா

10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

11. டாக்டர் த. ஹரிதாஸ்

சட்டமன்றமே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் – செயலாளர்

திருமதி கு. இந்துமதி – துணைச் செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள் – சார்புச் செயலாளர்

* திரு. ப. மோகன், தலைவர் மனுக்கள் குழு 5–10–2012 வரை, முனைவர் வைகைச்செல்வன், 22–10–2012 முதல் 28–2–2013 முற்பகல் வரை, திரு. ஆர். மனோகரன் 5–3–2013 முதல்

**25.03.2013 முதல் பேரவை நடவடிக்கைகளிலிருந்து ஆறு மாத காலத்திற்கு இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
மனுக்கள் குழு (2012–2013)
(பதினான்காவது பேரவை)
இருபத்தாறாவது அறிக்கை

முன்னுரை

அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். 2012–2013–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் இருபத்தாறாவது

குழுவின் கூட்டம்

விருதுநகர் மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 19.02.2013–ஆம் நாளன்று அம்மாவட்டத்தில் குழுக் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த மனுக்கள் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவற்றின் மீது அறிக்கைகள் கோரப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 60 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2013ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19–ஆம் நாளன்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் குழு கூடியது.

அக்கூட்டத்தில் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.ந. ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத் துறை அலுவலர்கள் குழு முன் பதிலளித்தனர். மனுதாரர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தெரிவு செய்யப்பட்ட 60 மனுக்களை குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 16 மனுக்கள் குறித்து குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 37 மனுக்கள் மீது அளிக்கப்பெற்ற அரசுத் துறைகளின் பதிலுரைகள் படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 7 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகள் ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்டன.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு–I–இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு–II–இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–III–இல் அளிக்கப்பட்டுள்ளன.

18–4–2013–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை – 600 009,
18.04.2013
விஜய, சித்திரைத் திங்கள் 5–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு – 2044.

ஆர்.மனோகரன்,
தலைவர், மனுக்கள் குழு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	5701	திரு.கீதாரி.அ.மு.கோபால், கி.முத்துராக்கன், பெருமாள்தேவன்பட்டி,பிள்ளையார்குளம், திருவில்லிபுத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.	காயல்குடி ஆற்றுப்படுகையில் **அமைந்துள்ள பிள்ளையார்குளம்** பெரியகுளம் கண்மாய் **விரிவாக்குதல் - சம்பந்தமாக.**

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
2008ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையின் பேரில் நபார்டு திட்டத்தின் கீழ் பிள்ளையார்குளம் கண்மாய் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. எனினும் சிறப்பு நிதி பெற்று கண்மாய் கரை பணிகள் செய்து தரப்படும். பிள்ளையார்குளம் பெரியகுளம் கண்மாய் மடை (Sluice), Shutters மற்றும் பாசன கால்வாய்கள் தற்பொழுது தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு சிறப்பு திட்ட கோட்டம், விருதுநகர் மூலம் நடைபெற்று வருகிறது. 31.03.2013–க்குள் பணிகள் முடித்துத் தரப்படும். காயல்குடி ஆற்றில் பிள்ளையார்குளம் பெரியகுளம் கண்மாய் அணைக்கட்டில் உள்ள சட்டர்கள் அமைக்கும் பணிகள் வரும் நிதியாண்டில் செய்து தரப்படும். (செயற்பொறியாளர், இராசபாளையம், மேல் வைப்பாறு வடிநில கோட்டம், அவர்களின் கடித எண். வப/ இவஅ /105R / கோ.24 / 2012/ நாள்.21.12.2012)	இப்பணியை சிறப்பு நேர்வாகக் கருதி வரும் 2013–2014 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
2	6157	திரு. R.இருளப்பன், ரைஸ்மில் தெரு, இராமசாமியாபுரம். கூமாப்பட்டி- 626133 வத்திராயிருப்பு ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.	கால்நடை மருத்துவமனை கட்டிதரக் கோருதல்

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
கூமாப்பட்டி ஊரக கால்நடை மருந்தகம் நிரந்தர கட்டிடத்திற்கு 2012-13 நிதியாண்டில் ESVH & VD திட்டத்தின் கீழ் ரூ.11,60,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மண்டல இணை இயக்குநர், விருதுநகர் அவர்களின் கடித எண். தலைமையலுவலக ந.க.எண்:12972/ஆ1/2012 நாள்:14.03.2012)	இப்பணியை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
3	6160	பெ.பெருமாள், சொக்கம்பட்டி பனிக்குறிப்பு ஊராட்சி, காரியாபட்டி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.	காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம் பனிக்குறிப்பு ஊராட்சி சொக்கம்பட்டி கிராமத்தில் மயானச் சாலையை தார்சாலையாக மாற்றி தர கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
காரியாபட்டி ஒன்றியம் பனிக்குறிப்பு ஊராட்சி சொக்கம்பட்டி மயானச்சாலை 2013-2014 ஆம் ஆண்டில் ஊரக உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய பரிந்துரை செய்யப்படும். (ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், காரியாப்பட்டி அவர்களின் கடித எண். ந.க.3848/2012/அ2 நாள் : 12.12.2012).	திட்ட அலுவலர் அவர்கள் இந்தப் பணியை விரைவாக செய்து முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அதுகுறித்து விவரங்களை ஓர் அறிக்கையாக குழுவிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4	6175	திரு.V. பிரபு (பொது மக்கள் சார்பாக), நந்திக்குண்டு, மேலத்துலுக்கன்குளம் (போஸ்ட்), காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.	நந்திக்குண்டு கண்மாயில் தூர்வார மற்றும் மடை செப்பனிட கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எடுத்து செய்யப்படும். (ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், காரியாப்பட்டி ந.க.3848/2012/அ2 நாள் : 12.12.2012.)	ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், காரியாபட்டி அவர்கள் விரைந்து பணியை முடித்து கொடுக்கும்படியும். பணியை முடித்த பின்னர், இதுகுறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்பவும் குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5	6176	திரு. S.பாலகிருஷ்ணசாமி, முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர், 10, நாராயணமடம் தெரு, விருதுநகர்.	விருதுநகர் - பெங்களூருக்கு பேருந்து வசதி செய்துதரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
திருநெல்வேலியிலிருந்து பெங்களூருக்கு இயக்கப்படும் அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்து தடம் எண்:870ன் மூலம் விருதுநகரிலிருந்து பெங்களூருக்கு 5 இருக்கைகள் ஒதுக்கப்பட்டு, இரவு 7.00 மணிக்கு பயணிகளை ஏற்றிச் செல்கிறது. மேலும் மனுதாரரின் கோரிக்கையை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு பரிந்துரை செய்து விருநகர் - பெங்களூருக்கு பேருந்து வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (பொது மேலாளர், விருதுநகர் அவர்களது கடித எண். த.அ.போ.க./ விருது / வஇ / சி2 / 4041 / 2012. நாள்:11.12.2012.)	விருதுநகரிலிருந்து பெங்களூருக்கு நேரடி பேருந்து விடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க பொது மேலாளர், த.நா.போ.க. (மதுரை)லிட் விருதுநகர் மண்டலம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6	6189	திரு.ஆர்.எஸ்.சுப்புராஜ் தலைவர் சித்துராஜபுரம் முதல்நிலை கிராம ஊராட்சி.	சித்துராஜபுரம் புதுக்கண்மாயை தூர் வாரி ஆழப்படுத்த வேண்டுதல்.

துறையின் பதிலுரை
(5)

கண்மாய் தூர்வாரும் பணியினை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2012-2013ம் ஆண்டு தேர்வு செய்து ஒரு பகுதி செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதையும், வரும் ஆண்டுகளில் மீதப்பணிகளை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
(வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ),சிவகாசி அவர்களது கடித எண். அ2/1323/2011 நாள்:17.12.2012)

குழுவின் பரிந்துரை
(6)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), சிவகாசி, அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7	6200	திரு. கே. காளிமுத்து, செயலாளர், தமிழ்நாடு அரசு ஓய்வு பெற்ற அரசு அலுவலர் சங்கம், திருவேங்கட அண்ணைகள் தெரு, திருவில்லிபுத்தூர்.	திருவில்லிபுத்தூர் - கலிங்கப்பட்டி, திருவில்லிபுத்தூர் - கோவில்பட்டி (வழி) இனாம்கரிசல்குளம், பெருமாள்தேவன்பட்டி, பிள்ளையார்குளம், பழைய சென்னாகுளம், அட்டைமில், ஆலங்குளம், வெம்பக்கோட்டை, சிப்பிப்பாறை ஆகிய ஊர்களுக்கு பேருந்து வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
அ) F92-B வழித்தடத்தின் மூலம் 08.12.2012 ம் தேதி முதல் திருவில்லிபுத்தூர் - கலிங்கப்பட்டி (வழி) பெருமாள் தேவன்பட்டி, அட்டை மில் வழித்தடத்தில் இரண்டு தனி நடைகள் காலை 10.15 மற்றும் 11.30 மணிக்கு இயக்கம் செய்யப்படுகிறது. ஆ)திருவில்லிபுத்தூரிலிருந்து F89-A, F88-A ஆகிய தடப்பேருந்துகள் மூலம் தலா இரண்டு தனி நடைகள் ஆக மொத்தம் 4 தனி நடைகள் ஆலங்குளம் வரை இயக்கப்படுகிறது. ஆலங்குளத்திலிருந்து கோவில்பட்டிக்குச் செல்ல பேருந்து வசதி உள்ளது. திருவில்லிபுத்தூரிலிருந்து பெருமாள்தேவன்பட்டி வழியாக கோவில்பட்டிக்கு 6 தனி நடைகள் தனியார் பேருந்து மூலம் இயக்கப்படுகிறது. கோரிக்கை வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ளது. (பொது மேலாளர், விருதுநகர் அவர்களது கடித எண். த.அ.போ.க./ விருது / வஇ / சி2 / 4065 / 2012 நாள்:11.12.2012.)	மேற்காணும் வழித்தடங்களில் பேருந்து இயக்க உரிய நடவடிக்கை எடுக்க பொது மேலாளர், த.நா. அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், விருதுநகர், அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	6201	திரு. க.நாராயணசாமி ஊர் பொதுமக்கள் சார்பாக செல்லையநாயக்கன்பட்டி கிராமம் செங்கமலப்பட்டி	செல்லையநாயக்கன்பட்டியில் சமுதாயக்கூடம் கட்டித்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2012-2013 ஆம் நிதியாண்டில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ),சிவகாசி அவர்களது கடித எண்.அ2/1323/2011 நாள்:11.12.2012)	செல்லையநாயக்கன்பட்டியில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர், சிவகாசி, அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	6209	திரு.பி.சுப்பிரமணியன் 8-வது வார்டு கிளை தலைவர் கே.கரிசல்குளம், காரியாபட்டி (தாலுகா) விருதுநகர் மாவட்டம்	காரியாபட்டி ஒன்றியம் - மீனாட்சிபுரத்திலிருந்து முக்குளம் வரை தார்சாலையை இருவழி சாலையாக மாற்றி புதியதாக சாலை அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மீனாட்சிபுரம் - அ.முக்குளம் சாலை கிமீ 0/0-14/6 ஆகும். இச்சாலையில் கிமீ 0/0-1/2 மற்றும் கிமீ 10/0-12/6 வரை உள்ள சாலை நல்ல நிலையில் உள்ளது, கிமீ 1/2-10/0 வரை மேம்பாடு செய்வதற்கு பிரதம மந்திரி கிராம சடக் யோஜனா திட்டத்தின் கீழ் தேசிய நெடுஞ்சாலை அலகின் முலம் அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கிமீ 12/6-14/6 வரை உள்ள சாலையை வரும் நிதியாண்டில் (2013-14) ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தில் சேர்த்து அரசிற்கு பிரேரணை பரிந்துரை செய்யப்படும். அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கண்ட சாலைப்பணிகள் செயல்படுத்தப்படும். (கோட்டப் பொறியாளர், நெ க(ம)ப, விருதுநகர் அவர்களின் கடித எண் 138/2012/வ4/நாள் 13.12.2012)	நிருவாக அனுமதி கிடைத்தவுடன் இப்பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்று கோட்டப்பொறியாளர் (நெ) க(ம)ப விருதுநகர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	6212	திரு. சோ.கரந்தமலை, ஒன்றியத்தலைவர் காரியாபட்டி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.	விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி டவுனில் இருந்து கழுவனச்சேரி கிராமம் வழியாக தோப்பூர் செல்லும் பழுதடைந்த சாலையைப் புதிதாக அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
காரியாபட்டி - அருப்புக்கோட்டை ரோடு முதல் கழுவனச்சேரி (வழி தோப்பூர்) செல்லும் சாலை வரும் நிதி ஆண்டில் நபார்டு திட்டத்தின் கீழ் செய்ய பரிந்துரை செய்யப்படும். (ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், காரியாபட்டி அவர்களது கடித எண். ந.க.3848/2012/அ2 நாள் 12.12.2012)	இப்பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கும்படி ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம் காரியாப்பட்டி, அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	6219	திரு.அ.நயினார், 2/10 நடுத்தெரு, மாத்தூர்.மகாராஜபுரம் (அஞ்சல்) திருவில்லிப்புத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.	மாத்தூர் ஊராட்சியில் வழங்கப்படும் குடிநீர் உப்புத்தன்மை அதிகமாய் உள்ளதால் அதை சரிசெய்து சுகாதாரமான குடிநீர் கிடைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கக் கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மாத்தூர் ஊராட்சியில் வழங்கப்படும் குடிநீர் உப்புத்தன்மை அதிகமாய் உள்ளதால் அதை சரிசெய்து சுகாதாரமான குடிநீர் கிடைப்பதற்கு ஒன்றிய பொது நிதியில் புதிய போர் அமைத்து நல்ல சுகாதாரமான குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். (ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், வத்திராயிருப்பு அவர்களது கடித எண் அ2/448/2011 நாள்:12.12.2012)	விரைந்து நடவடிக்கை எடுக்க ஆணையாளர் வத்திராயிருப்பு, அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	6220	ஆயர்தர்மம் கிராம பொதுமக்கள், இலந்தைக்குளம் அஞ்சல், வத்திராயிருப்பு ஒன்றியம், திருவில்லிபுத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.	திருவில்லிபுத்தூர் சட்ட மன்ற தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் ஆயர்தர்மம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
ஆயர்தர்மம் கிராமப்பகுதியில் ஆயர்தர்மம், சுரைக்காய்பட்டி, கொண்டையம்பட்டி, மீனாட்சிபுரம், நல்லூர்பட்டி, தைலாபுரம் காலனி, தைலாபுரம், அக்கனாபுரம், வலையங்குளம் என்ற 9 கிராமங்களை சேர்த்து மொத்த மக்கள் தொகை 20,000 ஆகும். இக்கிராமம் நத்தம்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய பகுதியில் உள்ளது. மேற்கண்ட ஆயர்தர்மம் கிராம பகுதிக்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனை ஆகியவற்றிற்கு இடையே உள்ள தூரம் 1.ஆயர்தர்மம் - நத்தம்பட்டி ஆ.சு.நி. - 15 கி.மீ. 2.ஆயர்தர்மம் - வ. புதுப்பட்டி ஆ.சு.நி. - 22 கி.மீ 3.ஆயர்தர்மம் - கோட்டையூர் ஆ.சு.நி - 11 கி.மீ 4.ஆயர்தர்மம் - குன்னூர் ஆ.சு.நி. - 13 கி.மீ 5.ஆயர்தர்மம் - வத்திராயிருப்பு அரசு மருத்துவ மனை - 17 கி.மீ 6.ஆயர்தர்மம் - திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை - 28 கி.மீ	ஆயர்தர்மம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்க துணை இயக்குநர் சுகாதார பணிகள், சிவகாசி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

(துறையின் பதிலுரை– தொடர்ச்சி)

(5)

மேற்குறிப்பிடப்பட்ட 9 கிராமங்களிலிருந்தும் பேருந்து வசதி இல்லை. எனவே கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களான நத்தம்பட்டி, கோட்டையூர் மற்றும் வ. புதுப்பட்டி ஆகியவற்றிற்கு உட்பட்ட துணை சுகாதார மையங்களை பிரித்து மேற்கண்ட ஆயர்தர்மம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க உரிய நடவடிக்கைக்கு அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும்.

(துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், சிவகாசி அவர்களது கடித எண். ந.க.எண். 1821/சி2/2006, நாள். 12/2012

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	6222	திரு. வி. நல்ல கணேஷ்ராம், என். புதூர், நல்லமநாயக்கண்பட்டி (அஞ்சல்), இராஜபாளையம் (வட்டம்).	இராஜபாளையம் - வடகரை (வழி) முதுகுடி, கிழவிகுளம் கூடுதல் பேருந்து வசதி செய்துதரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

கோரிக்கை வழித்தடத்தில் G42-A தடப் பேருந்தின் மூலம் 05.30, 06.30, 07.45, 08.50, 10.00, 11.05, 12.10, 13.25, 17.30, 18.45, 20.05, 21.10 ஆகிய நேரங்களில் மொத்தம் 12 தனி நடைகள் தினசரி இயக்கப்படுகிறது. இப்பேருந்து வசதியே இப்பகுதி பயணிகளின் பயன்பாட்டிற்கு போதுமானதாக கருதப்படுகிறது.

(பொது மேலாளர், விருதுநகர் அவர்களது கடித எண். த.அ.போ.க. / விருது / வஇ / சி2 /4060/2012 நாள்: 11.12.2012)

குழுவின் பரிந்துரை

(6)

ஆய்வு செய்து கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க பொது மேலாளர், த.நா. அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், விருதுநகர், அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	6241	திரு.கோ.சங்கையா, செயலாளர் சிவகாசி சீனியர் சிட்டிசன்ஸ் அசோசியேசன் 152 முண்டக நாடார் தெரு , சிவகாசி	சிவகாசி ஊராட்சி ஒன்றியம், சித்துராஜபுரம் ஊராட்சி சசிநகர் முதல் சரஸ்வதிபாளையம்வரை கழிவுநீர் தேங்கியுள்ளதால் வாறுகால் அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
சிவகாசி ஊராட்சி ஒன்றியம், சித்துராஜபுரம் ஊராட்சி சசிநகரிலிருந்து சரஸ்வதிபாளையம் அமைந்துள்ள பகுதிக்கு வாறுகால் கட்டுவதற்காக ரூ.25.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யக்கோரி இவ்வலுவலக ந.க.பி3/2080/2011 நாள்.28.08.2012-ன்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர், (கி.ஊ), சிவகாசி அவர்களது கடித எண்.ந.க.பி3/2080/2011. நாள்.11.12.2012)	பணிகளை விரைந்து முடிப்பதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சிவகாசி, அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	6338	ஜெ.விக்னேஷ்வரி, த/பெ - நா.ஜெயராம் பெரிய தும்மக்குண்டு, மாவில்பட்டி அஞ்சல் 626202 அருப்புக்கோட்டை வட்டம் விருதுநகர் மாவட்டம்.	பெரியதும்மக்குண்டு கிராமத்தில் கிராமக் கழிவுநீர் தேங்காதவாறு வாய்க்கால் கட்டித் தரக் கோருதல்.

		துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
		(5)	(6)
		கழிவுநீரைக் கடத்த 132 மீ தூரம் வரையிலும் புதிய வாய்க்கால் கட்டித்தருவதற்கு உரிய மதிப்பீடு 4.65 இலட்சம் ஆகும். மேற்படி நிதி ஒதுக்கீடும் வாய்க்கால் கட்ட நிர்வாக அனுமதியும் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வரப்பெறும் பட்சத்தில் மேற்படி பணி உடனடியாக செய்து தரப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), அருப்புக்கோட்டை அவர்களது கடித எண். ந.க.ஆ2/418/2012, நாள்: 05.10.2012 மற்றும் 21.11.2012)	இதுகுறித்து விரைந்து நடவடிக்கை எடுத்து அதன் விவரங்களை ஓர் அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்க வட்டார வளர்ச்சி அலுவலர் அருப்புக்கோட்டை, அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
16	6339	திரு. வி.பரமசிவம், த/பெ - வினைதீர்த்தான் தெற்குபட்டி, பாலவநத்தம், அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம்.	போக்குவரத்துக்கு இடையூராக உள்ள பொதுப்பாதை சர்வே எண்: 713/13ல் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றித் தரக் கோருதல்

		துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
		(5)	(6)
		ஆக்கிரமிப்பினை அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் ஆக்கிரமிப்பு அகற்றப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), அருப்புக்கோட்டை அவர்களது கடித எண். ந.க.ஆ2/3537/2012, நாள்: 12.12.2012)	ஆக்கிரமிப்புகளை அகற்ற வட்டார வளர்ச்சி அலுவலர், அருப்புக்கோட்டை, அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

இணைப்பு – II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
1	6155	திரு. மு. தினகரன், அல்லாலப்பேரி, காரியாபட்டி(வழி), விருதுநகர் மாவட்டம்.	காரியாபட்டி ஒன்றியம் - ஸ்ரீராம்புர் முதல் வல்லப்பன்பட்டி சாலை மோசமாக உள்ள சாலையை மேம்பாடு செய்து கொடுக்க வேண்டுவது சம்மந்தமாக.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, அல்லாலப்பேரி - வெற்றிலை முருகண்பட்டி சாலையிலிருந்து வல்லப்பன்பட்டி சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 1.00 கிமீ ஆகும். மேலும் இச்சாலையை மேம்பாடு செய்வதற்கு சிறப்பு பழுது பார்த்தல் திட்டத்தின் கீழ் அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்படும். அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கண்ட சாலைப்பணி செயல்படுத்தப்படும். (கோட்டப் பொறியாளர், நெ க(ம)ப, விருதுநகர் அவர்களது கடித எண். 138/2012/வ4/நாள் 13.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
2	6158	திரு. S. ராமர், த/பெ. சஞ்சீவி செட்டியார், 39/8/1, வா. 3. தேவர் வடக்குத் தெரு, செட்டியார்பட்டி - 626 122, இராசபாளையம் தாலுகா, விருதுநகர் மாவட்டம்.	விருதுநகர் மாவட்டம், **இராஜபாளையம் தாலுகா, தளவாய்புரம்** பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் **அமைக்க வேண்டுதல்.**

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
தளவாய்புரம் கிராமத்தில் திரு. ஆ. ச. பழனிச்சாமி நாடார் கூட்டுறவு சுகாதார மருத்துவமனையினை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றியமைக்க துறை வாயிலாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அரசிடமிருந்து உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் திரு. ஆ.ச. பழனிச்சாமி நாடார் கூட்டுறவு சுகாதார மருத்துவமனையினை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றியமைக்க மேல்நடவடிக்கை எடுக்கப்படும். **(துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், சிவகாசி அவர்களின் கடித ந.க.எண். 1821/சி2/2007)**	துறையின் பதில் **படித்துப் பதிவு செய்யப்பட்டது.**

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	6159	திரு. பி.கந்தசாமி, சொக்கம்பட்டி, கு.புதூர் (அஞ்சல்), திருச்சுழி (வழி), விருதுநகர் (மாவட்டம்).	காரியாபட்டி - திருச்சுழி (வழி) குச்சம்பட்டி கூடுதல் பேருந்து வசதி செய்துதரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

A31A தடப்பேருந்தின் மூலம் காரியாபட்டியிலிருந்து திருச்சுழிக்கு சித்துமூன்றடைப்பு, P.புதுப்பட்டி, குச்சம்பட்டி விலக்கு வழியாக 8 தனி நடைகளும் குச்சம்பட்டி தொடுதல் செய்து இரண்டு தனி நடைகளும் காரியாபட்டி - பிள்ளையார்நத்தம் (வழி) குச்சம்பட்டி விலக்கு, திருச்சுழி 3 தனி நடைகளும் இயக்கப்படுகிறது.

மேலும் A98-A தடப்பேருந்தின் மூலம் 06.15, 07.15, 16.30, 17.45 ஆகிய நேரங்களில் திருச்சுழி- K.புதூர் வழித்தடத்தில் குச்சம்பட்டி வழியாக 4 தனி நடைகள் இயக்கப்படுகிறது. இப்பகுதியில் பயணிகளின் பயன்பாடு மிகவும் குறைவாக இருப்பதால் இப்பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

(பொது மேலாளர், விருதுநகர் அவர்களது கடித எண் த.அ.போ.க./ விருது / வஇ / சி2 /4056/2012, நாள்: 11.12.2012)

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	6162	திரு.எஸ்.காளியப்பன், 80, கீழப்புதுத்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர்.	விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் நியமிக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் நியமிக்க சென்னை, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது . (இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்பநலம், (பொ) விருதுநகர், அவர்களின் கடித எண். ந.க.எண்.6971/குந/2012 நாள்.14.12.2012).	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5	6164	திரு.சு.நல்லதம்பி, தலைவர், மக்கள்நல இயக்கம் 46/30, ரோட்டடித்தெரு, வத்திராயிருப்பு.	விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர்கள் நியமிக்கக் கோருதல் தொடர்பாக.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் மரு.மேகலா, பெண்மருத்துவர் பணியாற்றி வருகிறார் மற்றும் மரு.புஷ்பலதா ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து வாரம் ஒருமுறை வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு மாற்றுப்பணியில் சென்றுவருகிறார். (இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்பநலம், (பொ) விருதுநகர், அவர்களின் கடித எண். ந.க.எண்.6971/குந/2012 நாள். 14.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6	6167	திரு.வே.அழகர்சாமி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றிய துணைச் சேர்மன், கான்சாபுரம், ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி, விருதுநகர் மாவட்டம்.	கான்சாபுரம் கிராமத்திற்கு செல்லும் சாலையின் நுழைவு வாயிலில் பாலம் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளதால் பாலத்தை சீரமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
கான்சாபுரம் கிராமத்திற்கு செல்லும் சாலையின் நுழைவாயிலில் பாலம் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளதை புதிய பாலம் ரூ.15.00 லட்சம் மதிப்பீட்டில் Infra Gap Filling – 2012-2013 திட்டத்தின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், வத்திராயிருப்பு அவர்களது கடித எண். அ2/1347/2011 நாள்:12.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7	6169	ஆ.மஞ்சுளா, 32வது வார்டு நகர்மன்ற உறுப்பினர், ராமசாமிபுரம், அருப்புக்கோட்டை.	இராமசாமிபுரம் 32வது வார்டிற்கு புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
இராமசாமிபுரம் 32-வது வார்டிற்கு புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்க ஏற்கனவே R.APDRP யில் மதிப்பீடு அனுமதியாகி உள்ளது. தற்போது மேலும் ஒரு புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்க விரைவில் மதிப்பீடு தயார் செய்து பணி முடிக்கப்படும். (தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், அருப்புக்கோட்டை, அவர்களது கடித எண். செ.பொ/ப/அருவை/ கோ.சட்டமனற மனுக்கள் குழு /அ.எண் 1003/12-13, நாள் 14.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
8	6171	திரு. எஸ்.இராஜபாபு. தாதம்பட்டி கிராமம் மீசலூர் அஞ்சல், விருதுநகர் மாவட்டம்.-626 003.	சிமெண்ட் சாலை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் தாதம்பட்டி ஊராட்சியில் வடக்குத் தெரு ராஜ வீதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி குறித்து உரிய நடவடிக்கை எடுக்க கேட்கப்பட்டுள்ளது. தற்போது தாதம்பட்டி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் மேற்படி பணிகள் செய்ய இயலாத நிலை இருந்தது. ஆகையால் மேற்படி பணிகள் (சிமெண்ட் சாலை அமைக்கும்பணி) 2013-2014 ஆம் ஆண்டிற்கான தாய் திட்டத்தின் கீழ் சர்வே எடுக்கப்பட்டு உள்ளது. விரைவில் தாய் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வரப் பெற்றவுடன் பணிகள் மேற் கொள்ளப்படும்.
(வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ), விருதுநகர் அவர்களது கடித எண்.ந.க.பி2/3132/2012 நாள்: 13.12.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
9	6174	திரு. ராஜேந்திரன். 172, காமராஜர் நகர், தளவாய்புரம்	மயானகொட்டகை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

வரும் நிதி ஆண்டில் தாய் திட்டத்தின் கீழ் மயான கொட்டகை அமைக்க பணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.
(வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), இராஜபாளையம் அவர்களது கடித எண். ந.க.பி2/2626/2012 நாள்:12.12.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	6178	ஜீ. ராஜேந்திரன், முன்னாள் இராணுவம், பிள்ளையார் குளம் (அஞ்சல்), திருவில்லிபுத்தூர் (வட்டம்).	திருவில்லிபுத்தூர் - பெருமாள்தேவன்பட்டி வரை இயக்கப்படும் பேருந்தை வேப்பங்குளம் வரை நீடித்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
1) F89A தடப்பேருந்து 06.00 மணிக்கு திருவில்லிபுத்தூரிலிருந்து பெருமாள்தேவன்பட்டி வரை இயக்கிய நடையை தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழு 2011-2012 ன் பரிந்துரையின் பேரில் சிறிது நேரம் மாற்றி ஆலங்குளம் வரை 16.02.2012 முதல் நீடித்து இயக்கப்படுகிறது. 2) F51-A தடப்பேருந்தின் மூலம் திருவில்லிபுத்தூரிலிருந்து இராஜபாளையம் செல்லும் போது 11.20, 14.50 ஆகிய நேரங்களில் 2 தனி நடைகளும் இராஜபாளையத்திலிருந்து திருவில்லிபுத்தூர் செல்லும்போது 06.25 மணிக்கு ஒரு தனி நடையும் F88-A தடப்பேருந்து மூலம் சத்திரப்பட்டியிலிருந்து திருவில்லிபுத்தூர் வரும் போது 6.50 மணிக்கு ஒரு தனி நடையும் F06-A தடப்பேருந்தின் மூலம் திருவில்லிபுத்தூரிலிருந்து இராஜபாளையம் செல்லும் போது 13.15, 19.15 ஆகிய நேரங்களில் 2 தனி நடைகளும் இராஜபாளையத்திலிருந்து திருவில்லிபுத்தூர் செல்லும்போது 8.40, 14.35 ஆகிய நேரங்களில் 2 தனி நடைகளும் F94-A தடப்பேருந்தின் மூலம் திருவில்லிபுத்தூரிலிருந்து இராஜபாளையம் செல்லும் போது 08.05, 12.00, 16.35, ஆகிய நேரங்களிலும் இராஜபாளையத்திலிருந்து திருவில்லிபுத்தூர் செல்லும் போது 10.45 மணிக்கும் மொத்தம் 4 தனி நடைகளும் ஆக மொத்தம் 12 தனி நடைகள் வேப்பங்குளம் கிராமத்திற்கு பேருந்து இயக்கம் செய்யப்படுகிறது. இவ்வசதியே போதுமதனதாகக் கருதப்படுகிறது. (பொது மேலாளர், விருதுநகர் அவர்களது கடித எண். த.அ.போ.க. / விருது / வஇ / சி2/4064/2012 நாள்: 11.12.2012).	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	6182	திரு. ஏ.மார்ஷல் ஸ்டாலின் 6ஏ/3, சேர்மன் சண்முக நாடார் சாலை, சிவகாசி - 626123	சிவகாசி நகரின் போக்குவரத்தை சீர்படுத்த போக்குவரத்து காவல் நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சிவகாசி நகரில் ஏற்கனவே போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த போக்குவரத்து காவல் நிலையத்திற்கு வழங்கப்பட்ட 1 சார்பு ஆய்வாளர் பதவியை அரசாணை நிலை எண்:489 உள் (காவல்-3) துறை நாள்:14.03.1996ல் நிரந்தரமாக்கப் பட்டுள்ளது. அரசாணை (வாலாயம்) எண்:266 உள் (காவல்-8) துறை நாள்:09.03.2012ல் இந்த பதவி போக இக்காவல் நிலையத்திற்கு வழங்கப்பட்ட தற்காலிக பதவியான 9 இரண்டாம் நிலை காவலர்கள் பதவியின் பணிக்காலத்தை 01..01.2012 முதல் 31.12.2012 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த தற்காலிக பதவிகளை நிரந்தரமாக்கிட காவல் துறை தலைமை இயக்குநருக்கு இவ்வலுவலக கடித எண்:அ1(1)/தற்காலிகம்-05/1986 நாள்:26.10.2012ன் மூலம் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. (கண்காணிப்பாளருக்காக, விருதுநகர் ந.க.எண்:அ1(1)/தற்காலிகம்-5/1986 நாள்:26.10.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	6186	திரு.எஸ்.வெங்கடேசன் , W. மீனாட்சிபுரம், சேசபுரம் அஞ்சல் 626 116, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்	வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், மேலக்கோபாலபுரம் ஊராட்சி அண்ணாநகர் நடுப்பகுதியில் செல்லும் ஓடையில் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வரும் தண்ணீரால் குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் வருவதால் வெள்ள தடுப்புச் சுவர் கட்டித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், மேலக்கோபாலபுரம் ஊராட்சி அண்ணாநகர் நடுப்பகுதியில் செல்லும் ஓடையில் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வரும் தண்ணீரால் குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் வருவதால் வெள்ள தடுப்புச் சுவர் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், வத்திராயிருப்பு அவர்களது கடித எண். அ2/448/2011 நாள் 12.12.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
13	6196	திரு. அ.பி. சதுரகிரி, 6/864, ஆறுமுகம்காலனி, சாட்சியாபுரம், சிவகாசி மேற்கு	சாட்சியாபுரத்தில் பொது இலவச கழிப்பிடம் மற்றும் சிறுநீர் பிறை கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

சாட்சியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் பொது இலவச கழிப்பிடம் மற்றும் சிறுநீர் பிறை கட்ட இடவசதி கோரி சிவகாசி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இடவசதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் வரும் நிதியாண்டில் பொது இலவச கழிப்பிடம் மற்றும் சிறுநீர் பிறை கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(வட்டார வளர்ச்சி அலுவலர்,(வ.உ), சிவகாசி அவர்களது கடித எண் அ2/1323/2011. நாள்.11.12.2012).

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் கருக்கம் (4)
14	6198	திரு.கே.பாலுச்சாமி, த/பெ கந்தசாமி சூலக்கரை (நடுவூர்). அருப்புக்கோட்டை (T.K.) விருதுநகர் (மாவட்டம்)	அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சூலக்கரை ஊராட்சியிலுள்ள மாத்திநாயக்கன்பட்டி கிராமத்தில் காலனி அருகிலுள்ள ஊரணியில் தடுப்பு அணை கட்ட கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
சூலக்கரை ஊராட்சி மாத்திநாயக்கன்பட்டி கிராமத்தில் காலனி அருகிலுள்ள ஊரணியில் தடுப்பணை சூலக்கரை ஊராட்சி நிதியின் மூலம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் ந.க.அ2/1630/2012, நாள்: 10.12.2012)	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் கருக்கம் (4)
15	6203	திரு.ரா.நவநீதகிருஷ்ணன், த/பெ. ராமசாமி, 5/25,இ.புதுப்பட்டி, எரிச்சநத்தம் (அருசல்) சிவகாசி (தாலுகா), விருதுநகர் மாவட்டம்	விருதுநகர் - அழகாபுரி சாலையில் உள்ள தரைப்பாலத்தில் மேம்பாலம் கட்ட கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
பாலம் கட்டக் கோரிய இடம் மாநில நெடுஞ்சாலை வத்திராயிருப்பு - மகாராஜபுரம் - அழகாபுரி - விருதுநகர் சாலையில் கிமீ 21/10 ல் தற்பொழுது தரைப்பாலமாக உள்ளது. இச்சாலையில் கிமீ 18/0-37/4 வரை இடைவழித் தடத்திலிருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தவும், கிமீ 18/0-22/0, 23/0-24/0 மற்றும் 30/0-31/8 வரை மேம்பாடு செய்யவும் குறுக்கு வடிகால் வேலைகள் உட்பட ரூ 13.625 கோடி மதிப்பீட்டில் மத்திய சாலைகள் நிதித்திட்டத்தின் கீழ் (2012-13) ஒப்புதல் பெறப்பட்டு மதிப்பீடு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 6.60 மீட்டர் அகலத்தில் நான்கு கண்கள் கொண்ட ஒரு உயர்மட்டப் பாலமும் பாலத்தின் நான்கு பக்கமும் தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் துணை மதிப்பீடு ரூ 70.89 லட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 10.12.2012ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்த உடன்படிக்கை செயலாக்கப்பட்டவுடன் விரைவில் பாலம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (கோட்டப் பொறியாளர், (நெ க(ம)ப) விருதுநகர் அவர்களது கடித எண். 138/2012/வ4/நாள் 13.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
16	6205	திரு. எஸ்.பழனிவேல், 14வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் , விருதுநகர் நகராட்சி, 36, கொல்லர் தெரு, விருதுநகர்.	பணிகள் - விருதுநகர் நகராட்சியின் வார்டு எண்:14, சந்திக் கூடம் தெருவில் உள்ள சுமார் 1.50 மீட்டர் விட்டம் கொண்ட 40 வருடத்திற்கும் மேலான இச்சிமரம் அதிக பளு காரணமாக கீழ்புறம் நோக்கி சாய்ந்துள்ளதை அப்புறப்படுத்த கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

விருதுநகர் நகராட்சியின் வார்டு எண்:14 சந்திக்கூடம் தெருவில் உள்ள சுமார் 1.50 மீட்டர் விட்டம் கொண்ட 40 வருடத்திற்கும் மேலான இச்சிமரம் பொதுமக்களின் குடியிருப்பு பகுதியில் ஆபத்தினை விளைவிக்கக்கூடியதாக உள்ளதால் 16 மாட்டுவண்டி பாரமுள்ள இம்மரத்தினை அகற்ற விருதுநகர் நகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கியும், மரத்தினை ஏலமிட்டு, அரசு கணக்கில் வரவு வைக்கவும் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:ந.க.அ3/6366/2012 நாள்:11.12.2012ன்படி உத்தரவிடப்பட்டுள்ளது.
(வருவாய்க் கோட்டாட்சியாளர், அருப்புக்கோட்டை அவர்களின் கடித எண். ந.க.அ3/6366/2012 நாள்:11.12.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
17	6210	திரு.பி.விஜயரகுநாதன் மாவட்ட செயலாளர், காரியாபட்டி.	காரியாபட்டி பேரூராட்சிக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

குழுவின் குறிப்புரை
(6)

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி பேரூராட்சியின் தற்போதைய (2011) மக்கள் தொகை 18984 ஆகும். இதன் தினசரி குடிநீர் தேவை நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் 13.3 லட்சம் லிட்டர் ஆகும். தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் இப்பேரூராட்சிக்கு தினசரி வழங்கப்பட வேண்டிய குடிநீர் அளவு 9.8 லட்சம் லிட்டர் மற்றும் உள்ளூர் குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்க வேண்டிய குடிநீர் அளவு 3.5 லட்சம் லிட்டர் ஆகும். தற்போது கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 6.00 லட்சம் லிட்டரும், உள்ளூர் குடிநீர் ஆதாரங்களின் மூலமாக தினசரி சுமார் 5.50 லட்சம் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பேரூராட்சி மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது. மேற்கண்ட இவ்விரு ஆதாரங்களின் மூலமாக காரியாபட்டி பேரூராட்சிக்கு தினசரி 11.50 லட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கப் பெறுகிறது. காரியாபட்டி தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் கடைக்கோடி பேரூராட்சியாகும். சுமார் 140 கி.மீ. நீளமுள்ள பிரதான குழாய்கள் மூலமாகவும், ஆறு தொடர் நீரேற்று நிலையங்கள் மூலமாகவும் இப்பேரூராட்சிக்கு குடிநீர் வந்தடைகிறது. வழித்தடங்களில் ஏற்படும் எதிர்பாராத மின்தடை காரணமாக சில நாட்கள் குடிநீர் விநியோகம் அதிகம் பாதிப்பு அடைகிறது.

குடிநீர் பகிர்மானம் முழுவதும் உள்ளாட்சி நிர்வாகத்தை சார்ந்தது என்பதால் கிடைக்கப் பெறும் 11.50 லட்சம் குடிநீர் அளவை வைத்து 3 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்க பேரூராட்சி நிர்வாகத்திற்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(கு.கு.வ.வா பராமரிப்புக் கோட்டம், கோவில்பட்டி, நிர்வாகப் பொறியாளர், அவர்களின் கடித எண். கோ:239கூகுதிட்டம்/இவஅ1/2012-1 நாள்:12.12.2012)

துறையின் பதில் **படித்துப் பதிவு செய்யப்பட்டது.**

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
18	6216	திரு. அ. சங்கர்ராஜ், தொம்பக்குளம், இராஜபாளையம் வட்டம், விருதுநகர் மாவட்டம்.	இராஜபாளையத்திலிருந்து தொம்பக்குளம் கிராமத்திற்கு கூடுதல் பேருந்து வசதி செய்துதரக் கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

G31A இராஜபாளையம்-ஆலங்குளம் வழித்தடத்தில் 08.00am, 03.40pm, 08.55am, 04.50pm ஆகிய நேரங்களில் 4 தனி நடைகளும், G46-A தடப் பேருந்து மூலம் ராஜபாளையம் - ஆலங்குளம் வழித்தடத்தில் 06.30am, 09.00am, 03.30pm, 09.55pm ஆகிய நேரங்களில் 4 தனி நடைகளும் G93-A தடப்பேருந்தின் மூலம் இராஜபாளையம் - ஆலங்குளம் வழித்தடத்தில் 06.10pm, 07.10pm ஆகிய நேரங்களில் 2 தனி நடைகளும் சேர்த்து மொத்தம் 14 தனி நடைகள் தொம்பக்குளம் கிராமத்திற்கு தொடுதல் செய்து பேருந்து இயக்கம் செய்யப்படுகிறது. மேலும் இராஜபாளையம் - ஆலங்குளம் வழித்தடத்தில் தொம்பக்குளம் விலக்கு வழியாக 20 தனி நடைகளும் பேருந்து இயக்கம் செய்யப்படுகிறது. இப்பேருந்து வசதியே தொம்பக்குளம் கிராம மக்களுக்கு போதுமானதாக கருதப்படுகிறது.
(பொது மேலாளர், விருதுநகர் அவர்களது கடித எண். த.அ.போ.க. / விருது / வஇ / சி2/ 4057 /2012இ நாள்: 11.12.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
19	6217	திரு. சேர்மத்துரை, தலைவர், பெருந்தலைவர் காமராஜ் வாசக சாலை, 658, ஞானகிரி ரோடு, சிவகாசி.	சிவகாசி பஜார் குறுக்கு வழிப்பாதையில் மேம்பாலம் அமைக்க வேண்டுதல்

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
சிவகாசி பஜார் திருத்தங்கல் ரோட்டில் மூப்பனார் தெரு பாலத்தில் இருந்து பழைய பஸ் ஸ்டாண்ட் பாலம் வரை மேம்பாலம் அமைக்க கோரப்பட்டுள்ளது. மேம்பாலம் அமைக்க திட்டம் செயல்படுத்தக் கூடிய இடமானது ஓடையாகும். இந்த ஓடையின் வழியாக மேம்பாலம் அமைக்கும் திட்டம் பெரிய திட்டமாக உள்ளதால், வருகிற நகர்மன்ற கூட்டத்தில் அனுமதி பெற மன்ற பொருள் வைக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி பெற்ற பின்பு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்படும். (நகராட்சி அலுவலர், ஆணையாளர், சிவகாசி நகராட்சி அவர்களின் கடித எண். 9465/2012/இ1)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
20	6218	திரு.ஜி.ஜி.அய்யாவுபாண்டியன்,வழக்கறிஞர், நகர் மன்ற உறுப்பினர், 36,கிருஷ்ணன் கோயில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர்.	கிருஷ்ணன்கோவில் தெருவில் உள்ள குளம் சுற்றுச் சுவர் மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி குளத்தினை தூர்வாரி பழுதுபார்த்து மராமத்து செய்ய வேண்டுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
இலாகா உதவிப் பொறியாளர் மூலம் மதிப்பீடு தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருக்கோயில் (செயல் அலுவலர் அருள்மிகு நாச்சியார் ஆண்டாள் திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களின் கடித ந.க. எண்.204/2012 அ2 நாள் 10.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
21	6224	திரு. மா. கருப்பசாமி, 2/50, வாழவந்தாள்புரம்,சாத்தூர்.	சாலை வசதி செய்து தரக் கோருதல்

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
சம்பந்தப்பட்ட இடம் ஆயவுசெய்யப்பட்டது. நகராட்சியில் தற்போது போதிய நிதி ஆதாரம் இல்லை. நகராட்சிக்கு (IHSDP) ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி அபிவிருத்தி திட்டத்தில் பல்வேறு திட்டப்பணிகள் ரூபாய் 658 லட்சத்தில் எடுத்து செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் கோரிக்கையை முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்து சாலை வசதி செய்துத்தரப்படும். (சாத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் கடித எண். 2007/12/எப்1, நாள்: 12.12.2012).	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
22	6225	திரு. அ.தங்கச்சாமி, தென் இந்திய நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில், 19, சிட்டுக் கொத்தனார் தெரு, அருப்புக்கோட்டை - 626101, விருதுநகர் (மாவட்டம்).	அருப்புக்கோட்டையிலிருந்து விருதுநகர் இரயில் நிலையத்திற்கு பகல் மற்றும் இரவு நேரங்களில் பேருந்து வசதி செய்துதரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
அருப்புக்கோட்டையிலிருந்து விருதுநகருக்கு 70 தனி நடைகள் புறநகர் பேருந்துகளும் மற்றும் 90 தனி நடைகள் நகரப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. விருதுநகர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இரயில் நிலையத்திற்கு இரவு நேரங்களில் 10 தனி நடைகளும் மற்றும் பகல் நேரங்களில் 4 தனி நடைகளும் இரயில் வரும் நேரங்களில் இயக்கப்படுகிறது. மேலும் அருப்புக்கோட்டை- விருதுநகர் (வழி) விருதுநகர் அரசு மருத்துவமனை, இரயில்வே பீடர் நிறுத்தம் வழியாக 4 தனி நடைகள் இயக்கப்படுகிறது. மேலும் அருப்புக்கோட்டையில் இருந்து விருதுநகர் இரயில் நிலையத்திற்கு 16.40, 17.25, 20.15, 21.20 ஆகிய நேரங்களில் கூடுதலாக 4 தனி நடைகள் இயக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பேருந்து வசதிகளை அருப்புக்கோட்டை மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். (பொது மேலாளர், அவர்களது கடித எண். த.அ.போ.க. / விருது / வஇ / சி2 /4059/2012 நாள்: 11.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
23	6226	திரு.எஸ்.கந்தசாமி உலக்குடி, நரிக்குடி ஒன்றியம்	உலக்குடி சாலை சீரசெய்யக் கோருதல்

துறையின் பதிலுரை
(5)

குழுவின் குறிப்புரை
(6)

மனுதாரர் சீர்செய்யக் கோரியுள்ள சாலை இத்துறையின் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதரச் சாலையாகிய நரிக்குடி - புல்வாய்க்கரை சாலையிலிருந்து உலக்குடி செல்லும் சாலை கிமீ 0/0-3/2 ஆகும். இச்சாலையை மேம்பாடு செய்வதற்கு சுமார் ரூ 50.00 லட்சங்கள் தேவைப்படும். மேலும் இச்சாலையில் கிமீ 1/4ல் ஒவ்வொன்றும் 6.60 மீட்டர் நீளத்தில் இரண்டு கண்கள் கொண்ட பாலம் கட்டுவதற்கு சுமார் ரூ 40.00 லட்சங்கள் தேவைப்படும். இப்பணியை வரும் நிதியாண்டில் (2013-2014) ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்த்து பிரேரணை பரிந்துரை செய்யப்படும். அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் இப்பணி செயல்படுத்தப்படும்.
(கோட்டப் பொறியாளர், (நெ கு(ம)ப) விருதுநகர் அவர்களது கடித எண். 138/2012/வ4/நாள் 13.12.2012)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
24	6227	திரு. சு.காளிமுத்து, த/பெ.சுப்பையா 1/663, மாரியம்மன்நகர், பள்ளபட்டி	பள்ளபட்டி ஊராட்சி மாரியம்மன்நகரில் திருமண மண்டபம் கட்டித்தரக் கோருதல்.

TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு பெற்று திருமண மண்டபம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.உ) சிவகாசி அவர்களது கடித எண். அ2/1323/2011. நாள்.11.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
25	6231	திரு. பிறை.ஏ.இராஜகோபால், எம்.ஏ., சாத்தூர் வட்டார தேவேந்திர குல வேளாளர் உறவின்முறை மேம்பாட்டு சங்கம் 2/33, வாழவந்தாள்புரம், சாத்தூர்.-626203.	சாத்தூர் வட்டம் கோல்வார்பட்டியில் நிரந்தர கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுதல்

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
விருதுநகரில் நடமாடும் கால்நடை மருந்தகம் துவக்கப்படவுள்ளதால், மேற்படி கால்நடை மருந்தகத்தின் மூலம் வார இருமுறை கோல்வார்பட்டி கிராம கால்நடைகளுக்கு நேரடியாக சிகிச்சை மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ள ஆவன செய்யப்படும். (மண்டல இணை இயக்குநர், விருதுநகர் அவர்களின் கடித ந.க.எண் 3210/ஆ/2012 நாள்:12.12.2012)	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
26	6232	திரு. A. முருகமுனியாண்டி சிவந்திபட்டி, செட்டுடையான்பட்டி (அஞ்சல்), சாத்தூர் (வட்டம்), விருதுநகர் (மாவட்டம்).	சாத்தூர் - சாத்தூர் இயக்கப்படும் வட்டப் பேருந்தை ஒரே திசையில் செல்லாமல் மாறி மாறி இயக்கம் செய்யவும், செட்டுடையான்பட்டி வரை இயக்கப்படும் பேருந்தை கோல்வார்பட்டி வரை நீடித்து இயக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
C23-A தடப்பேருந்தின் மூலம் 4 தனி நடைகள் சாத்தூர் - சாத்தூர் (வழி) நடுவப்பட்டி, மணிப்பாறைபட்டி, கோல்வார்பட்டி, அணைக்கரைப்பட்டி, கொல்லபட்டி விலக்கு வழியாகவும் 5 தனி நடைகள் சாத்தூரிலிருந்து அணைக்கரைப்பட்டி, கோல்வார்பட்டி, மணிப்பாறைபட்டி, நடுவப்பட்டி வழியாக சாத்தூருக்கும் மாறி மாறி இயக்கப்படுகிறது. சாத்தூரிலிருந்து செட்டுடையான்பட்டி வரை இயக்கப்படும் பேருந்தை கோல்வார்பட்டி வரை நீடித்து இயக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (பொது மேலாளர், அவர்களது கடித எண். த.அ.போ.க. / விருது / வஇ / 4042/2012 நாள்: 11.12.2012).	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
27	6233	திரு.து.கந்தசாமி, த/பெ.துரைராஜ், அணைக்கரைப்பட்டி, சாத்தூர் 626 203	விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம். கத்தாளம்பட்டி நியாய விலைக் கடையில் இருந்து குடும்ப அட்டைகளை பிரித்து அணைக்கரைப்பட்டியில் பகுதிநேரக் கடை அமைக்கக் கோருதல்

துறையின் பதிலுரை
(5)

குழுவின் குறிப்புரை
(6)

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், கத்தாளம்பட்டி கிராம தாய்க்கடையிலிருந்து (504 குடும்ப அட்டைகள்) பிரிக்கப்படும் பகுதிநேர சேவைமைய நியாயவிலைக்கடை அமைப்பதற்கு 125 குடும்ப அட்டைகள் உள்ளன. அரசு நடப்பு விதிகளின்படி அரசு ஆணை (நிலை) எண்.147, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை (எப்1) நாள்: 24.08.2006 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.291, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை (எப்1) நாள்: 04.10.2007ன்படி பகுதிநேர நியாயவிலைக்கடை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், இந்நேர்வில் 125 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளது. அரசாணை(நிலை)எண்.291 கூட்டுறவு உணவு மற்றும் நகர்வோர் பாதுகாப்புத்துறை (எப்.1)துறைகள் நாள் 04.10.2007-ல், இது போன்ற நேர்வுகளில் விதிமுறைகளை தளர்த்தி பகுதிநேர நியாயவிலைக்கடை அமைக்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அணைக்கரைப்பட்டியில் பகுதிநேரக்கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
(மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், விருதுநகர் அவர்களது கடித ந.க எண். சி.எஸ்.1/8540/2012 நாள்:19.12.2012)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
28	6234	திருமதி. V. செந்தில்குமாரி முத்துராஜ், நகர்மன்ற தலைவர், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, ஸ்ரீவில்லிபுத்தூர்.	2012-2013-ஆம் கல்வியாண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல அரசு மாணவியர் விடுதி திறக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மற்றும் நகரில், 2012-2013-ஆம் கல்வியாண்டில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல அரசு மாணவியர் விடுதி திறப்பதற்கு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி, நகரில் புதிய அரசு மாணவியர் விடுதி திறப்பதற்கு 50 மாணவியர்கள் தங்கும் அளவிற்கு கட்டிட வசதி, தண்ணீர், குளிப்பறை, கழிவறை போன்ற வசதிகளுடன் வாடகைக் கட்டிடம் பார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட வசதிகளுடன் வாடகை கட்டிடம் கிடைத்தவுடன் புதிய மாணவியர் விடுதி திறப்பதற்கான முன்மொழிவு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

(மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், விருதுநகர் அவர்களின் கடித எண். எம்.3/ 26796 /2012, நாள்: 13.12.2012.)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
29	6235	திரு. மு. தினகரன், அல்லாளப்பேரி, காரியாபட்டி தாலுகா	உயிருக்கு பங்கம் விளைவிக்கும் நிலையில் உள்ள தெருவிளக்கு போஸ்ட் மரங்களை மாற்றிக் கொடுக்க வேண்டுதல்.

துறையின் பதிலுரை
(5)

அல்லாளப்பேரி பஞ்சாயத்திற்குட்பட்ட அல்லாளப்பேரி, வல்லப்பன்பட்டி மற்றும் வெற்றிலை முருகன்பட்டியில் உள்ள பழுதான மின் கம்பங்கள் பார்வையிடப்பட்டு மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.
(செபொ/ப/அருவை/கோ. சட்டமன்ற மனுக்கள்குழு அவர்களின் அ.எண். எண் 1000/12 நாள் 14.12.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
30	6237	திரு. ஏ. மணிக்காளை பெருமாள்தேவன்பட்டி, பிள்ளையார்குளம் (அஞ்சல்) திருவில்லிப்புத்தூர் வட்டம்.	பிள்ளையார்குளம் ஊராட்சிக்குட்பட்ட பெருமாள்தேவன்பட்டி கிராமத்தில் உள்ள காளியம்மன் கோவில் ஊரணி ஆக்கிரமிப்பு அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

திருவில்லிப்புத்தூர் வட்டம் பிள்ளையார்குளம் ஊராட்சிக்குட்பட்ட பெருமாள்தேவன்பட்டி கிராமத்தில் ரோடு அருகில் உள்ள காளியம்மன் கோவில் ஊரணி சாலையோரம் ஆக்கிரமிப்பு செய்தவர்களை ஒரு வார காலத்திற்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளனர். ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஊரணியில் உள்ள மண்மேடு அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ஊரணி ஆழப்படுத்தி பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
(வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.உ), திருவில்லிப்புத்தூர் அவர்களின் கடித எண். அ2/2777/2012 நாள்:12.12.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
31	6239	திரு. பி.கோகுல கண்ணன், பெருமாள்தேவன்பட்டி, பிள்ளையார்குளம் (அஞ்சல்), திருவில்லிபுத்தூர் (வட்டம்).	திருவில்லிபுத்தூர் - கோவில்பட்டிக்கு இனாம் கரிசல்குளம், பெருமாள்தேவன்பட்டி, அட்டைமில், ஆலங்குளம், வெம்பக்கோட்டை வழியாகவும் திருவில்லிபுத்தூர் - வெம்பக்கோட்டைக்கும் பேருந்து வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
திருவில்லிபுத்தூர் - கோவில்பட்டிக்கு கோரிக்கை வழித்தடத்தில் தனியார் பேருந்து மூலம் தினசரி 6 தனிநடைகள் இயக்கப்படுகிறது. இராஜாளையம் - கோவில்பட்டிக்கு திருவில்லிபுத்தூர் சிவகாசி சாத்தூர் வழியாக 58 தனி நடைகள் இயக்கப்படுகிறது. F88-A தடப் பேருந்தின் மூலம் திருவில்லிபுத்தூர் - ஆலங்குளத்திற்கு 18.00 19.05 ஆகிய நேரங்களில் 2 தனி நடைகளும் F89-A 07.30, 09.00, 05.20, 06.20 ஆகிய நேரங்களில் 4 தனி நடைகளும் ஆக மொத்தம் 6 தனி நடைகளும் இயக்கப்படுகிறது. சிவகாசியிலிருந்து ஆலங்குளத்திற்கு வெம்பக்கோட்டை வழியாக தினசரி 14 தனி நடைகளும் இயக்கப்படுகிறது. இப்பேருந்து வசதியே கோரிக்கை வழித்தடத்திற்கு போதுமானதாக கருதப்படுகிறது. (பொது மேலாளர் அவர்களது கடித எண். த.அ.போ.க. / விருது /வஇ / 4043/2012 நாள்:11.12.2012.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
32	6240	கிராம நிர்வாகக்குழு பெருமாள்தேவன்பட்டி பிள்ளையார்குளம் (அஞ்சல்) திருவில்லிப்புத்தூர் (வழி) விருதுநகர் மாவட்டம் – 626137	பிள்ளையார்குளம் ஊராட்சிக்குட்பட்ட பெருமாள் தேவன்பட்டி கிராமத்தில் சமுதாயக்கூடம் கட்டித் தர கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
பிள்ளையார்குளம் ஊராட்சி பெருமாள்தேவன்பட்டி கிராமத்தில் சமுதாயக்கூடம் அமைப்பதற்கு தேவையான இடவசதி உள்ளது. மேற்படி கிராமத்தில் கீழ்கண்ட திட்டங்களின் மூலம் சமுதாயக்கூடம் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1.தன்னிறைவுத் திட்டம் (2012-13) 2.சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (2013-14) வரிசை எண்:1ல் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தின் மூலம் மூன்றில் ஒரு பங்கு பங்களிப்புத் தொகையினை செலுத்த சம்பந்தப்பட்ட கிராம மக்கள் இசைவு அளித்துள்ளதின் அடிப்படையில் மேற்படி சமுதாயக்கூடம் கட்டும் பணியினை ஒப்பந்த அடிப்படையில் செய்ய பரிந்துரை செய்யப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) திருவில்லிபுத்தூர் அவர்களின் கடித எண்.அ2/2777/2012 நாள்:12.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
33	6337	திரு. கு.திருப்பதி, தலைவர், பெரியவள்ளிக்குளம் ஊராட்சி	பெரியவள்ளிகுளம் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பு அருகில் கழிவுநீரை வெளியேற்றவும் நீர் வழிப்பாதையை அகலப்படுத்தவும் வேண்டுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
மனுதாரர் கோரியுள்ள பணி தற்சமயம் தற்காலிகமாக சரிசெய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணியை நிரந்தரமாக சரிசெய்ய அரசிடமிருந்து போதிய நிதி வரப்பெற்றதும் கோரிக்கை பரிசீலனை செய்யபடும். (வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் ந.க.அ2/1630/2012, நாள்: 10.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
34	6340	குலாளர் சமூகத்தினர், (மண்பாண்டத் தொழிலாளர்கள்), சிவந்திநாதபுரம் (வாழ்வாங்கி), பெரியநாயகிபுரம் ஊராட்சி, அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம்.	மண்பாண்டத் தொழிலாளர் தொழிற்கூடம் செப்பனிட கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

சம்பந்தப்பட்ட தொழிற்கூடம் பராமரிப்பு செய்ய ஒன்றியப் பொறியாளரிடம் மதிப்பீடுகள், கோரப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் வரப்பெற்றதும் ஒன்றிய பொது நிதியின் மூலம் பராமரிப்பு பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
(வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.உ), அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கடித எண். ந.க.அ2/1630/2012, நாள்: 10.12.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
35	7152	திரு.சி.ஜெயராட்சகன், நா. கலிங்கப்பட்டி, நல்லி அஞ்சல், சாத்தூர் வட்டம், விருதநகர் மாவட்டம்.	குமாரபுரம் ஊராட்சிக்கு வரும் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து தோட்டிலோவன்பட்டி வரை சாலை செப்பனிட கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலை மதுரை-கன்னியாகுமாரி (NH7) முதல் தோட்டிலோவன்பட்டி வரையுள்ள சாலை கி.மி.0/0-1/6 சாலையாகும். இதன் மேல்பரப்பு தார்ச்சாலையாகும். இச்சாலை மிகவும் சேதமடைந்துள்ளது. இச்சாலை பேருந்து வழித்தடமாகும். இதனை சீரமைக்கும்பொருட்டு சரள்பரப்பி இரண்டடுக்கு கற்கள் பரப்பி, பின்னர் சாலை அமைப்பதற்கும், கி.மி.0/765-ல் ஆர்.சி.சி.சிலாப் கல்வெட்டு அமைப்பதற்கும் மற்றும் கி.மீ.0/620ல் தடுப்புச் சுவர் அமைப்பதற்கும் மதிப்பீடு ரூ.43.00 இலட்சத்திற்குத் தயார் செய்து ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பாண்டு (2012-13) நபார்டு திட்டத்தின்கீழ் பேருந்து வழித்தட சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தும்படி சென்னை ஊரக வளர்ச்சி இயக்குனர் அவர்கள் அறிவுரை வழங்கியதன் பேரில் நபார்டு திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எடுத்து செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், சாத்தூர், விருதுநகர் மாவட்டம் அவர்களின் கடித எண். ந.க.அ2/4779/2012, நாள்: 28.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
36	7153	திரு.சி.ஜெயராட்சகன், நா. கலிங்கப்பட்டி நல்லி அஞ்சல், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.	குமாரபுரம் ஊராட்சி கலிங்கப்பட்டி கிராமத்தில் ஆருந்ததியர் காலனியில் வாறுகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
1) அருந்ததியர் காலனியில் சிமெண்ட் சாலை 125 மீட்டருக்கு அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.500000/- இலட்சம் ஆகும். 2) அருந்ததியர் தெருவில் சிமெண்ட் சாலை 125 மீட்டருக்கு அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.500000/- ஆகும். 3) அருந்ததியர் மயானம் செல்லும் பாதையில் பிள்ளையார் கோவில் பின்புறம் வாறுகால் 450 மீட்டருக்கு அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.500000/- ஆகும். 4) அருந்ததியர் மயானம் செல்லும் பாதையில் சிமெண்ட் சாலை 500 மீட்டருக்கு அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.800000/- இலட்சம் ஆகும். மேற்காணும் பணிகளுக்கு தேவையானநிதி, மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசிடமிருந்து சிறப்பு நிதி ஒதுக்கீடாக வரப்பெறும் பட்சத்தில் மேற்கண்ட பணிகளை முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்யப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.உ), ஊராட்சி ஒன்றியம் சாத்தூர், விருதுநகர் மாவட்டம் அவர்களின் கடித எண். ந.க.அ2/4779/2012, நாள்: 28.12.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
37	7154	திரு. சி.ஜெயரட்சகன்,தலைவர், ந. கலிங்கப்பட்டி. நள்ளி அஞ்சல், விருதுநகர் மாவட்டம்.	குமாரபுரம் ஊராட்சி, கலிங்கபட்டி கிராமத்தின் தெற்கே உள்ள ஓடையில் ஒரு தடுப்பணை அமைகக கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
கிராமம் ஆய்வு செய்யப்பட்டு 2013–14ஆம் நிதியாண்டில் தடுப்பு அணை கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (நிர்வாகப் பொறியாளர், தகுவவா, திட்டக் கோட்டம், விருதுநகர்)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
1	6185	திரு. என்.நாகேந்திரன் 32, வீரபத்திரன் தெரு, விருதுநகர்	பழைய பேருந்து நிலையம் பக்கம் உள்ள வாறுகால் சுத்தம் செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
விருதுநகர் பழைய பேருந்து நிலையம் பக்கம் உள்ள வாறுகால் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. வாறுகாலில் மண் தூர் வாரும் பணிகள் J.C.B. வாகனம் மூலம் எடுக்கப்பட்டுள்ளது. (ஆணையாளர்(பொ), விருதுநகர் நகராட்சி அவர்களின் கடித ந.க.எண். எச்1/14556/2012 நாள்:12.12.2012.)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
2	6192	திரு. பெரியாழ்வார், தெற்கு பொன்னகரம் இராஜபாளையம்.	வீட்டு குடிநீர் இணைப்பு மற்றும் தெரு நல்லி அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
மனுதாரர் கோரிய பகுதியில் போர் போடப்பட்டு, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, முறையாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), இராஜபாளையம், ந.க.பி2/2626/2012 நாள் : 12.12.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
3	6193	திரு. இராஜேந்திரன் காமராஜர் நகர், தளவாய்புரம்	தளவாய்புரம் ஊராட்சி 8-வது வார்டு அருந்ததியர் தெருவிற்கு மேல்புரம் உள்ள பெரிய வாறுகால் கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
தளவாய்புரம் ஊராட்சியில் மனுவில் குறிப்பிடப்பட்ட வாறுகால் பணி டெண்டர் விடப்பட்டு வேலை நடைபெறுகிறது விரைவில் பணி முடிக்கப்படும் (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), இராஜபாளையம், ந.க.அ2/1864/2012 நாள்:12.12.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4	6199	திரு. எஸ்.நாராயணன் 3, ஓடைத் தெரு, விருதுநகர்.	வார்டு எண் 20ல் ஓடைத் தெரு வாறுகால் சுத்தம் செய்யக் கோருதல்

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
வார்டு எண்:20 ஓடைத் தெருவில் உள்ள வாறுகால் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து பணிகள் மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது. (ஆணையாளர்(பொ), விருதுநகர் நகராட்சி அவர்களின் கடித எண். எச்1/14556/2012 நாள்:12.12.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5	6207	திரு. S.முனியாண்டி, தோப்பூர், காரியாபட்டி தாலுகா	காரியாபட்டி தாலுகா, தோப்பூர் கிராமத்தில் குறைந்த அழுத்த மின்சாரத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கக் கோருதல் .

துறையின் பதிலுரை (5)

குழுவின் குறிப்புரை (6)

தோப்பூர் கிராமத்தில் பழுதாகி இருந்த மின்மாற்றியில் உள்ள Bushing rod களை சரி செய்து ஜம்பர்களை பிரித்து அடித்து தற்பொழுது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.
(செயற்பொறியாளர், அருப்புக்கோட்டை அவர்களின் கடித எண். செபொ/ப/அருவை/தொநுஉ/ கோ.சட்டமன்ற மனுக்கள் குழு / அ.எண் 1002/12-13, நாள் 14.12.2012)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6	6208	திரு. M.பசியாவரம், மேலக்கள்ளங்குளம், காரியாபட்டி தாலுகா.	காரியாபட்டி தாலுகா, மேலக்கள்ளங்குளம் கிராமத்தில் குறைந்த அழுத்த மின்சாரத்தை சரிசெய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)

குழுவின் குறிப்புரை (6)

மேலக்கள்ளங்குளம் கிராமத்தில் உள்ள மின்மாற்றிக்கு வரும் HT Line ல் ஜம்பரில் இருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து மேலும் டிரான்ஸ்பார்மில் உள்ள Bus bar களை பிரித்து அடித்து, தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.
(பொது மேலாளர், அருப்புக்கோட்டை அவர்களின் கடித எண். செபொ/ப/அருவை/ கோ.சட்டமன்ற மனுக்கள் குழு / அ.எண் 1001/12-13 நாள் 14.12.2012)

நிறைவேற்றப்பட்டதாக கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7	7151	திரு. சி.ஜெயரட்சகன்,தலைவர், குமாரபுரம் ஊராட்சி, ந. கலிங்கப்பட்டி கிராமம், நள்ளி அஞ்சல், சாத்தூர் வட்டம்,	விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், நள்ளி நியாயவிலைக் கடையில் இருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து கலிங்கப்பட்டி கிராமத்தில் பகுதிநேர சேவை மையம் அமைக்கக் கோருதல்

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், நள்ளி கிராம தாய்க்கடையிலிருந்து பிரிக்கப்படும் பகுதி நேர சேவை மையம் அமைப்பதற்கு 152 குடும்ப அட்டைகள் உள்ளன. பிரிக்கப்பட்ட பின்னர் தாய்க் கடையில் 562 குடும்ப அட்டைகள் இருக்கும். இடைப்பட்ட தூரம் 7 கி.மீ. உள்ளது. பகுதி நேர சேவை மைய நியாய விலைக் கடை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரித்த பின்னர் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் 1.5 கி.மீ.தூரம் இருக்க வேண்டும் என அரசு விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கலிங்கப்பட்டி கிராமத்தில் பகுதி நேர சேவை மையம் அமைக்க அரசு விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், விருதுநகர் அவர்களின் கடித எண். சி.எஸ்.1/13642/2011, நாள் 27.12.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது. அ.மு.பி. ஐமாலுதீன், செயலாளர்.